

சென்னை அடையார் இராசரத்தினம் முத்தமிழ்ப் பேரவையில் 18.07.2025 அன்று தமிழ்நாடு தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடைபெற்ற "தமிழ்நாடு நாள் விழா"வில் அகவை முதிர்ந்த தமிழறிஞர் என்ற அரசாணையினை (100 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பெறுகையில்) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மதுரை அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றச் செயலாளர் கே.வி. இராமகிருட்டினன் அவர்களுக்கு வழங்கினார்கள்.



சென்னை, எழிலகத்தில், நேற்று (21.07.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை செயல்பாடுகள் குறித்து துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலர் சத்ய பிரதா சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.ஜான் லூயிஸ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு. சிவராசு, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன இயக்குநர் டாக்டர் விஜயராணி, கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளர் சா.ப.அமிரித், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர் - தொரப்பாடி பகுதி இளைஞர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## கழகப் பேச்சாளர் இரா.தமிழ்வாணன் சிறப்புரை!

வேலூர், ஜூலை 22 -

வேலூர் மாநகரம் தொரப்பாடி பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் பொதுக்கூட்டம் நாளை ( ஜூலை 23 - புதன் கிழமை) மாலை 6 மணிக்கு நடக்கிறது.

கூட்டத்திற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.ராஜேஷ் தலைமை தாங்குகிறார்.

வட்டக் கழக செயலாளர் டி.கணேஷ்குமார் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரசாத் என். விவேக், ஏ.பி.யாகேஷ், தமிழ் கதிரவன், ஜே.செந்தில் பி.பாலாஜி, வட்டக் கழக செயலாளர்கள் அப்பு என்ற தனசேகர், எம்.பாபு, ஏ.எம். ஏழுமலை பி.குமரேசன் சி.ஆர்.ரவி, கே.எஸ். ரசூல், என்.நவீன், பி. சுமித்ரா, பழனி, கே.வீரமணி, எம்.பார்த்த சாரதி, எஸ்.ஹரி எம்.ஆறுமுகம், எஸ்.மோகனம், எஸ்.சீனிவாசன், ஏ.எஸ்.வடிவேல், என்.ராஜா, பி.கனகராஜ், எம்.மயில் வாகனம், எம். கார்த்தி, பக்தவச்சலம், ரேவதி, இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கழக தணிக்கைக் குழு உறுப்பினர், மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, தலைமைக் கழக பேச்சாளர் இரா. தமிழ்வாணன், மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார், தொரப்பாடி பகுதி செயலாளர் ஆர் .கே ஐயப்பன், மண்டல குழு தலைவர் எஸ். வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகம் மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு, கஜேந்திரன், தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகிறார்கள்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜ மார்த்தாண்டன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார் மாவட்ட பொருளாளர் நரசிம்மன், தேர்தல் பணி குழு செயலாளர் என்.சுப்பிரமணி, மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் எம்.நூருல்லா, மாவட்ட மகளிர் அணி செயலாளர் டாக்டர் எம்.ராஜேஸ்வரி மோகன்காந்தி, பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். கதிரேசன், மா.ப.அன்புநிதி, மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ரமேஷ், அல்லாபுரம் பகுதிச் செயலாளர் சி.எம்.தங்கதுரை, மாநகர துணை செயலாளர் ஏ.ஆர்.முன்னா ஷெரீப், ஒய்.தேவநேசன், மாநகர மாநகர பொருளாளர் நா.அசோகன் கணியம்பாடி ஒன்றியச் செயலாளர் என்.கஜேந்திரன், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்,பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் டி.முகேஷ் நன்றி கூறுகிறார்.

### ஆனைமலை புலிகள் காப்பகத்தில்

# இந்தியாவின் முதல் இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு சிறப்பு மையம்!

## தமிழ்நாடு அரசு அமைக்கிறது!

சென்னை, ஜூலை 22-

ஆசிய வெப்பமண்டலப் பகுதிகளில் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த கவர்ச்சிகரமான பறவைகளில் ஒன்றான இருவாச்சி பறவையினை பாதுகாப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக, ஆனைமலை புலிகள் காப்பகத்தில் (ATR) இருவாச்சி பறவைகள் பாதுகாப்புக்கான சிறப்பு மையத்தை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இப்புதிய முன்னெடுப்பின் மூலம் இந்தியாவில் இருவாச்சி பறவைகள் பாதுகாப்பில் தமிழ் நாடு முன்னணியில் உள்ளது. மேலும், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள வெப்பமண்டல வன சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் ஒரு பெரிய முன்னேற்றமாகும்.

இருவாச்சி பறவைகள் வெப்பமண்டல காடுகளில் விதைகளைப் பரப்பி, மரங்களில் மீளுருவாக்கத்திற்கு ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. இருப்பினும், வாழ்விடச் சீரழிவு, காடழிப்பு மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக இந்த பறவை இனங்கள் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. இப்பறவைகளின் பாதுகாப்பிற்கான அவசரத்தை உணர்ந்து, அறிவியல் ஆராய்ச்சி, வாழ்விட மறுசீரமைப்பு, சமூக ஈடுபாடு மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மூலம் இந்த சவால்களை எதிர்கொள்ள தமிழ் நாடு ஒரு பிரத்யேக மையத்தை நிறுவுகிறது.

முன்முயற்சியின் முக்கிய அம்சங்கள்

- இடம்: ஆனைமலை புலிகள் சரணாலயம் (ATR), கோயம்புத்தூர் மாவட்டம் அதன் சுற்றுச்சூழல் வளம் மற்றும் தற்போதுள்ள பாதுகாப்பு உள்கட்டமைப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- கவனம் செலுத்தும் இனங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் நான்கு இனங்கள்: பெரிய இருவாச்சி, மலபார் சாம்பல் இருவாச்சி, மலபார் கருப்பு வெள்ளை இருவாச்சி மற்றும் இந்திய சாம்பல் இருவாச்சி.
- பாதுகாப்பு கருவிகள்: அதிநவீன ஆராய்ச்சி, வாழ்விட மேப்பிங், கூடு பாதுகாப்பு, காலநிலை மாற்ற மதிப்பீடு, குடிமக்கள் அறிவியல் முயற்சிகள் மற்றும் வன ஊழியர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கான திறன் மேம்பாடு.

கூட்டு முயற்சிகள்: சலிம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையம், இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை, இந்திய வனவிலங்கு நிறுவனம், உயர் நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனம், உள்ளூர் அரசு சாரா அமைப்பு மற்றும் இயற்கை கழகம்.

**நிதி செலவு**

இந்த மையத்தை நிறுவுவதற்காக அழிந்து வரும் உயிரினப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மொத்தம் 1 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு

1. 10 லட்சம் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்தல்.
2. 59.4 லட்சம் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் மையம் அமைத்தல்.
3. 12.6 லட்சம் வாழ்விட மதிப்பீடு.
4. 6 லட்சம் இருவாச்சி பறவைகள் வாழ்விடத்தைப் பாதுகாக்கும் தனியார் உரிமையாளர்களுக்கு ஊக்கத்தொகை.
5. 12 லட்சம் வாழ்விட மேப்பிங், இனங்கள் மேப்பிங், பங்குதாரர் விழிப்புணர்வு மற்றும் பணியாளர்கள் பயிற்சி மற்றும் ஊழியர்களிடையே திறன் மேம்பாடு.

**குறிக்கோள்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

இம்மையம் கீழ்க்கண்டவற்றில் தனது கவனத்தைச் செலுத்தும்:

1. அறிவு இடைவெளிகளை நிரப்புதல்: இருவாச்சி பறவைகளின் பரவல், இனப்பெருக்கம் குறித்த தரவு சார்ந்த நுண்ணறிவுகள் மற்றும் நடத்தை.
2. பாதுகாப்பு ஆராய்ச்சி: நீண்டகால கண்காணிப்பு, தொலைநோக்கி மற்றும் சூழலியல் ஆய்வுகள்.
3. வாழ்விட மறுசீரமைப்பு: சீரழிந்த பகுதிகளில் அத்திமரம், சாதிக்காய் மற்றும் கருங்குங்கிலியம் போன்ற பூர்வீக இருவாச்சியின் உணவு மரங்களை நடுதல்.
4. சமூக ஈடுபாடு. உள்ளூர் மாணவர்களுக்கான உதவித்தொகைகள், கூடு தத்தெடுப்பு திட்டங்கள் மற்றும் விதை சேகரிப்பு மூலம் நிலையான வாழ்வாதார வாய்ப்புகள்.
5. விழிப்புணர்வு மற்றும் கல்வி: இயற்கை தகவல் மையம், மாணவர்களுக்கான கள அடிப்படையிலான திட்டங்கள், நாட்டுப்புற ஆவணங்கள் மற்றும் வருடாந்திர இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு மாநாடுகள்.

இந்த முயற்சி தமிழ்நாட்டின் துணிச்சலான பாதுகாப்பு பயணத்தில் மற்றொரு மைல்கல் ஆகும். இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பு சரணாலயம், நீலகிரி வரையாடு திட்டம், தேவாங்கு பாதுகாப்பு மையம் மற்றும் மதுக்கரையில் செயற்கை நுண்ணறிவு மூலம் யானைகள் பாதுகாப்பு திட்டம் ஆகியவற்றை நிறுவியதைத் தொடர்ந்து இருவாச்சி பறவைகளின் பாதுகாப்பபிற்கான சிறப்பு மையம் உருவாக்கப்பட்டதன் மூலம், இருவாச்சி பறவைகள் பாதுகாப்பை நிறுவனமய மாக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.

அழிந்து வரும் பல உயிரினங்களைப் பாதுகாக்கும் பாரம்பரியத்தைக் கொண்ட ஆனைமலை புலிகள் காப்பகம், இப்போது இருவாச்சி சூழலியல் மற்றும் பாதுகாப்புத் தலைமைத்துவத்திற்கான மையமாகச் செயல்படும். இந்த மையம் பல்லுயிர் பாதுகாப்பிற்கான எதிர்கால தலைமுறை பாதுகாவலர்களை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' விழிப்புணர்வு பிரச்சாரத்தை, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தொடங்கி வைத்தார். உடன் ப்ரியா விஜயரங்கன், குட்டி க.புகழேந்தி, காலேஜ் கு.ரவி, மு.க.கௌதம், இரா.மின்னல்கமல், ஸ்ரீதேவி பழனி, மாணவர் மன்றம் பரணி உட்பட பலர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டத்தில்

# தோட்டக் கலைத் திருவிழா மலர்க்கண்காட்சி! - குற்றாலம் சாரல் விழா!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

தென்காசி. ஜூலை 22 -

தென்காசி மாவட்டம் குற்றாலம் சாரல் திருவிழா நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பங்கேற்று ஐந்தருவி சாலையில் அமைந்துள்ள அரசு சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலைத் திருவிழா மலர்கண்காட்சியினை துவக்கி வைத்தும், குற்றாலம் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சாரல் விழா நிகழ்வையும் துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தென்காசி குற்றாலம் சாரல் திருவிழா நிகழ்வு மாவட்ட நிர்வாகம் சார்பில் நேற்று முன்தினம் (20.07.2025) குற்றாலம் பேரூராட்சிக்கு உட்பட்ட குற்றாலம் கலைவாணர் அரங்கில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன் கோவில்) பழனி நாடார் (தென்காசி) சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்) மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி, கலை பண்பாட்டு துறை துணை இயக்குனர் கோபாலகிருஷ்ணன், பேரூராட்சி உதவி இயக்குனர் வில்லியம் ஜேசுதாஸ், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் சுஷ்மா, கல்லூரி கல்வி இணை இயக்குனர் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பங்கேற்று குற்றாலம் சாரல் திருவிழாவை துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

மகிழ்ச்சியான நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. சாரல் திருவிழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. ஆனால் சாரல் இருக்காது.

இன்று அருவிகளில் தண்ணீரும் நன்றாக விழுகிறது, சாரலும் இருக்கிறது,இதைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் எல்லாம் சரியாக இருக்கிறது என்பதற்கான அத்தாட்சியாக அமைந்துள்ளது.

வெளியூர்களிலிருந்து சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவதாலும், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் வழக்கத்தை விட அதிகமாகவும் வருவார்கள்.

அவர்கள் மகிழ்ச்சியோடு வந்து திரும்பி செல்ல வேண்டும்.இதனால் மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர், வன அலுவலர் ஆகியோர்களிடம் குளிப்பதற்கு அனுமதி கொடுக்குமாறு கூறியிருக்கிறேன். இந்த ஆட்சி வந்த பிறகு அனைத்தும் சிறப்பாகவே நடைபெற்று வருகிறது.அதுவும் சரியான நேரத்தில் செய்யப்பட்டு வருகிறது.

உங்களுடன் ஸ்டாலின் என்ற முகாம் மூலம் தமிழ்நாடு முழுவதும் 10,000ம் சிறப்பு முகாம்கள் நடைபெற்று உடனடியாக தீர்வு காணப்பட்டு வருகிறது. எதைச் செய்ய முடியுமோ அதனை செய்கிறோம். தென்காசி மாவட்டத்திற்கு விரைவில் முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து நீங்கள் எதிர்பார்க்கும் பல திட்டங்களை அறிவிக்க இருக்கிறார்கள்.இது தொடர்பாக நானும் மாவட்ட ஆட்சியரும் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

எந்த திட்டங்களை அறிவித்தால் சரியாக இருக்கும் என்பதையும் கலந்து பேசி வருகிறோம். தென்காசி மாவட்டம் வளர்ந்த மாவட்டமாக இருக்கும். அதற்காக திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர் அவர்கள் என்றைக்கும் உங்களுடன் இருப்பார்கள்.எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திராவிட மாடல் ஆட்சி தொடர நீங்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழைக்காலத்தில் ஜூலை மாதம் இரண்டாம் அல்லது மூன்றாம் வாரத்தில் சாரல் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.இந்த சாரல் விழாவின் ஒரு பகுதியாக சாரல் விழா மலர் கண்காட்சி குற்றாலம் ஐந்தருவி அரசு சுற்றுச்சூழல் பூங்காவில் இன்று முதல் 23.07.2025 வரை நடைபெறுகிறது. இந்த தோட்டக்கலை திருவிழாவில் பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் உட்பட சுமார் 10,000 ம் முதல் 20,000 ம் பேர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பழங்கள், காய்கறிகள், மலர்கள் மற்றும் வாசனை திரவிய பொருட்களை கொண்டு தமிழ்நாடு பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் பலவகைப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் கருத்துக்களைக்கொண்டு வடிவமைக்கப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய மலர் கண்காட்சியில் தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட *Dahlia, Carnation, Gerbera, Aster, Cut roses, Heliconia, Lily, Cut Chrysanthemum, Tuberose, Bird of paradise, Alstromeria, Gladiolus, Marigold, Statice & Anthurium* ஆகிய மலர்களைக் கொண்ட பூக்கூடைகள் மனங்களைக் கவரும் வகையில் அழகுற காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர்கள் மகிழும் வண்ணம் "*ShinChan Cartoon*", 14 அடி உயரத்தில் குற்றாலம் "பிரதான அருவி"(*Main Falls*) ஆகியவை அலங்கார மலர்களை கொண்டும், பூச்செடிகளை கொண்டு *Caterpillar* ஆகியவை கண்களை கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வாசனைப் பொருட்கள் கண்காட்சியில் கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கபட்டை, கசகசா, குறுமிளகு, ஏலக்காய், வெள்ளை குறுமிளகு, ஜாதிபத்திரி, சீரகம், சாம்பு, மல்லி, கருஞ்சீரகம்,மிளகாய் விதை, வெந்தயம்,அன்னாசிப்பூ, மராட்டிமொக்கு ஆகிய 17 வகையான பொருட்களை கொண்டு 7 அடி உயரம்,9 அடி அகலமும் கொண்டு வடிவமைக்கப்பட்ட "வண்ணத்து பூச்சி" பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. காய்கறிகளான கேரட், முள்ளங்கி, கத்தரி, பூசணிக்காய், குடைமிளகாய், சுரைக்காய், சேனைக்கிழங்கு, அன்னாச்சிபழம் மற்றும் தர்பூசணி மற்றும் பழங்களை கொண்டு "குற்றால மந்தி" உள்ளிட்ட வடிவமைப்புகள் காட்சிபடுத்தப்படுத்தப்பட்டுள்ளது. தென்னை, செவ்வாழை, பனை மற்றும் கூந்தல்பனை பொருட்களை கொண்டு அலங்கார நுழைவு வாயில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வையாளர்களை கவரும் வண்ணம் மலர்களால் ஆன "யானை உருவம்"; *Selfie Spot*ம் அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலகம் மூலமாக பாரம்பரிய உணவு முறைகளை ஊக்குவிக்கும் வகையில் முருங்கை சூப்,சோள பணியாரம், கேழ்வரகு சீவல், மக்காசோளபுட்டு,தினை,முறுக்கு, அங்கன்வாடிகளில் பயன்படுத்தபடும் இணை உணவு மாவு கொழுக்கட்டை ஆகியவற்றை கொண்டு பாரம்பரிய உணவும் பார்வையாளர்களுக்கு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவீன தோட்டக்கலை தொழில் நுட்பங்களை ஊக்குவிக்கும் வகையில் செங்குத்து தோட்டம் (*Vertical Garden*) மாடித்தோட்டம் ஆகியவற்றின் மாதிரி அமைப்புகள் மற்றும் செயல்படுத்தும் முறைகள் குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர்களால் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு காட்சிபடுத்தப்பட்டுள்ளது. குறவர் சமுதாயத்தினரின் வாழ்வியல் இயற்கை அங்காடி மூலம் தேன், உலர்ந்த அத்தி பழம், அத்தி பொடி மற்றும் மூலிகை பொடிகள் உள்ளிட்ட இயற்கை உணவின் மூலம் செய்யப்படும் மருத்துவம் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.பட்டு வளர்ச்சித்துறை, வேளாண்மை அறிவியல் நிலையம், ஆவின், பனை நண்பன் மற்றும் தேன் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். மேலும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் வந்து திரும்பிச் செல்ல வேண்டும். இது தான் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கமாகும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி,கனிமொழி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, ஆறுமுகச்சாமி, சேசு ராஜன், பொதுக் குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன், ரஹீம், தமிழ் செல்வி, ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், ரமேஷ்திவான் ஒலி, ரவிசங்கர், மணிகண்டன், பொன் செல்வன், சிவக்குமார், குமார், சுரேஷ் ஜெயா, சேக் முகமது நகர செயலாளர்கள் சாதிர்,வெங்கடேசன், அப்பாஸ், பீரப்பா, கணேசன், பேரூர் செயலாளர்கள் குட்டி என்ற சங்கர், முத்தையா, பண்டாரம், சுடலை, முத்து, தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா,கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபிபுர் ரகுமான், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, துணை அமைப்பாளர்கள் கருப்பணன்,ராமராஜ், சுரேஷ், முகம்மது அப்துல் ரஹீம்,அரசு வழக்கறிஞர்கள் வேலுச்சாமி, முத்துக்குமாரசாமி,அறங்காவலர்கள் வீரபாண்டியன், சுந்தர்ராஜன், ஸ்ரீதர், ராமலட்சுமி, பேரூராட்சி தலைவர்கள் வேணி வீரபாண்டியன், சுந்தர்ராஜன் உள்பட கழகத்தினர் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட திட்ட இயக்குனர் இரா.தண்டபாணி நன்றி உரையாற்றினார்.

குற்றாலம் சாரல் திருவிழா 2007 2025 முதல் 2707 2025 வரை 8 நாட்கள் நடைபெறுகிறது.

முன்னதாக அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கொழு, கொழு குழந்தைகள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



திருப்பத்தூர் ஒன்றியம் சின்னசமுத்திரம் ஊராட்சி பிச்சனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 15வது நிதியிலிருந்து ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக புதிய கட்டிடம் கட்டிட ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர்.வினோத்குமார், வட்டார மருத்துவ அலுவலர்.சௌந்தர்யா, ஒன்றிய துணை சேர்மன். டி.ஆர்.ஞானசேகரன், ஒருங்கிணைப்பாளர் வி.அன்பழகன், ஒன்றிய கவுன்சிலர்கள். இளவரசிஇளங்கோ, கலைவாணி செல்வராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் பன்னீர்செல்வம், மு.தலைவர்.குமார், சிவபாண்டியன் கலந்து கொண்டனர்.